வரலாறு காணாத வெற்றியை 2026 தேர்தலில் பெற்றிட

# ‘முப்பெரும் விழா’வின் உணர்வெழுச்சியை உரமாக்கி வெற்றிச் சரிதம் படைப்போம்!

## வலைதளப் பதிவில் – கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை!




சென்னை, செப்.18-

சென்னை - நந்தனம் - ஒய்.எம்.சி.ஏ. திடலில் நேற்று, மாலை கழக முப்பெரும் விழா மிகப் பிரம்மாண்டமாகவும், எழுச்சியாகவும் நடைபெற்றதைத் தொடர்ந்து சமூக வலைதளப் பதிவிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “வரலாறு காணாத வெற்றியை, ‘2026 தேர்தலில்’ நாம் பெற்றிட, இந்த முப்பெரும் விழா’வின் உணர்வெழுச்சியை உரமாக்கி வெற்றிச்சரிதம்படைப்போம்!” எனச் சூளுரைத்துள்ளார்.

கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**வள்ளுவ முனை முதல் தலைநகர் சென்னை வரை இனமான உணர்வால் ஒருயிராய் வாழும் உடன்பிறப்புகளின் சங்கமமானது அண்ணா சாலை ஒய்.எம்.சி.ஏ. திடல்!**

**அமெரிக்கப் பயணத்துக்குப் பின் உடன்பிறப்புகளின் முகங்களை ஒருசேரக் கண்டு உற்சாகம் பெற்றேன்!**

**நமது உயிர்நாடிக் கொள்கைகளில் ஒன்றான மாநில சுயாட்சிக் கொள்கையை வென்றெடுக்கவும் வரலாறு காணாத வெற்றியை 2026 தேர்தலில் பெற்றிடவும் இந்த ‘முப்பெரும்_விழா’வின் உணர்வெழுச்சியை உரமாக்கி வெற்றிச் சரிதம் படைப்போம்!**

**தத்தமது ஊர்களுக்குத் திரும்பிடும் உடன்பிறப்புகள் பாதுகாப்பான பயணத்தை மேற்கொண்டு வீடு சேர வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன் – டி.ஆர்.பாலு எம்.பி. சிறப்புரை !

# பம்மல் தெற்கு பகுதிக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## இ.கருணாநிதி,எஸ்.ஆர்.ராஜா பங்கேற்பு! வே.கருணாநிதி அறிக்கை !

சென்னை செப்:18

பம்மல் தெற்கு பகுதி கழகச் செயலாளர் வே.கருணாநிதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்,தாம்பரம் மாநகரம் பம்மல் தெற்கு பகுதி தி.மு.க.சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் பம்மல் தெற்கு பகுதி அவைத் தலைவர் ப. காளேஸ்வரன் தலைமையில், பகுதி செயலாளர்தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1 குழுத் தலைவர் எனது வே.கருணாநிதி வரவேற்புரையில் பகுதி பொருளாளர் ஆர்.உமாசங்கர், பகுதி துணை செயலாளர்கள் என்.பன்னீர்செல்வம்,பா. கவிதா, துரை இளங்கோவன்,மாவட்ட பிரதிநிதி பா. டில்லி, மாநகர பிரதிநிதிகள் பி.ஜே.வேந்தன்,என்.கே. ரவிச்சந்திின், இரா.கந்தவேலு, ரா.கோகுல், சு.மனோகரன் ஆகியோர் முன்னிலையில் பம்மல் எல்.சி. மஹால் திருமண மண்டபத்தில் இன்று (18.09.2024 புதன்கிழமை ) மாலை 5.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கூட்டதில் குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர், காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன்,கழக மக்களவைக் குழுத் தலைவர், கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர்,காஞ்சி வடக்கு மாவட்ட துணை செயலாளர் இ.கருணாநிதி, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர், தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, தாம்பரம் மாநகராட்சி மேயர் தாம்பரம் மாநகர துணை செயலாளர் க.வசந்தகுமாரி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் தாம்பரம் மாநகர அவைத் தலைவர் கோ.காமராஜ்,

பம்மல் வடக்கு பகுதி செயலாளர் திருநீர்மலை த.ஜெயகுமார், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் அ. தமிழ்மாறன் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இதில் மாவட்ட மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்,வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்,வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு பகுதி கழக செயலாளர் வே.கருணாநிதி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

6வது வட்ட செயலாளர் வி.எஸ்.ஜெகநாதன் நன்றி கூறுகிறார்.

நெல்லை மாநகர் முழுவதிலும்

# தி.மு.க. பவளவிழா - கழகக் கொடியேற்று விழா !

## மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்பு !

நெல்லை, செப்.18-

முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக பவள விழாவை முன்னிட்டு நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் நெல்லை பகுதி, தச்சை பகுதி, பாளை பகுதி மேலப்பாளையம் பகுதி ஆகிய 4 பகுதிகளில் உள்ள வார்டுகளைச் சேர்ந்த 32 இடங்களில் கழகக் கொடி கம்பங்கள் புதுப்பிக்கப் பட்டு கழக இருவண்ண கொடியேற்றும் நிகழ்வு 15.09.2024 அன்று வெகு சிறப்பாக மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் முன்னிலையில் நடைபெற்றது.

அதுபற்றிய விவரம் வருமாறு:-

நெல்லை பேட்டை பகுதி செயலாளர். நமச்சிவாயம் தலைமையில் 15,17, 19,22, 23,26,27,25, ஆகிய வார்டுகளில் கழக முன்னோடிகள்,கழக நிர்வாகிகள் கொடியேற்றினர்.

தச்சை பகுதி செயலாளர் பூ.சுப்பிரமணியன் தலைமையில் 4,2,13 ஆகிய வார்டுகளில் கழக முன்னோடிகள் கழக நிர்வாகிகள் கொடியேற்றினர்.

பாளை பகுதி செயலாளர் அன்டன் செல்லத்துரை தலைமையில் 33, 37, 36,7, 35, 9,32, ஆகியவாடுகளில் கழக முன்னோடிகள், கழக நிர்வாகிகள்கொடி ஏற்றினர்.

மேலப்பாளையம் பகுதியில் மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம் பகுதி செயலாளர் சாகுல் ஹமீது தலைமையில் 54,41,51,46 ஆகிய வார்டுகளில் கழக முன்னோடி கள், கழக நிர்வாகிகள் கொடியேற்றினர்.

இந்நிகழ்வுகளில் கழக மூத்த முன்னோடிகள் சட்ட திட்ட குழு உறுப்பினர் சுப. சீதாராமன், ஆறுமுகம், கோவிந்தராஜ், தம்பிரான், வேலு, ராஜாமணி, சாமுவேல், ஜோதிபாஸ், ஆப்டிகல் பாலா,பரமசிவன்,செல்லப்பா, வீரபாண்டியன், பிச்சையா, செய்யது மைதீன் ஆகியோர் பங்கேற்று கழகக் கொடியை ஏற்றி வைத்து சிறப்பித்த னர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வட்ட கழகச் செயலாளர்கள்,அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் செய்திருந்தனர்.




மயிலை மேற்கு–கிழக்கு பகுதி தி.மு.க சார்பில் கழக பவள விழா– முப்பெரும் விழா முன்னிட்டு கழக முன்னோடிகளுக்கு சிறப்பு செய்தல் நிகழ்ச்சி, மற்றும் பொது உறுப்பினர் கூட்டம் மயிலை மேற்கு பகுதிக்கழகச் செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி. தலைமையில் மயிலை கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.முரளி முன்னிலையில் பகுதி நிர்வாகிகள் ஜி.ஆர்.இராஜேந்திரன், பா.பாக்கியதாஸ், ஜி.முருகையன், எஸ்.முனுசாமி பி.எல்.தாஸ், ஏ.குமாரி, எல்.உதயகுமார், வட்டக்கழகத்தின் செயலாளர்கள் டி.இராஜவேலு, சீ.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.ஆர்.ராஜா சுரேஷ் குமார், அ. நாகராஜன், மு.இ.ஏழுமலை, மூ.இராஜேந்திரன், ஏ.தாஸ், மா.பா.அன்பு, அ.தவநேசன், வி.வெற்றிவேல், கோ.கண்ணன், துரைபார்த்திபன், பா.பொன்னுசாமி வரவேற்க சென்னை தென்மேற்கு மாவட்டக்கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. கழக முன்னோடிகளை சிறப்பித்து சிறப்புரையும், தலைமை கழகப் பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, மாநில இலக்கிய அணி இணைச்செயலாளர் நந்தனம் நம்பிராஜன் உரையாற்றிய கூட்டத்தில் மயிலை மேற்கு கிழக்கு பகுதியில் உள்ளடங்கிய பொதுக்குழு உறுப்பினர்கள் மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



# முரசொலியின் வரலாறு!

- மாணவர் நேசன் 1941ல் கைப்பிரதி தொடங்கப்பட்டது.
- முரசொலி மாதம் இருமுறை 10.8.1942 தொடக்கம்.
- முரசொலி வார ஏடாக 14.1.1948–ல்
- பெரியார் பிறந்த இந்நாளில் தான் 17.9.1960 நாளிதழாக மலர்ந்தது.
- இந்நாள் செப்டம்பர் பெரியார் பிறந்த நாள் 17.9.1879.
- கழகம் தொடங்கப்பட்ட நாள் 17.9.1949
- முரசொலி நாளிதழாக மலர்ந்த நாள் 17.9.1960

# ஜனநாயகப் பேரியக்கமாம் தி.மு.க.வின் மாபெரும் விழா!

## கழக முப்பெரும் விழாவின் எழுச்சிமிக்க வரலாறு – கண்கவர் வீடியோ ஒளிபரப்பு!

**சென்னை, செப். 18 –**

**சென்னை – நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. திடலில் நேற்று மாலை நடைபெற்ற மாபெரும் விழாவில் ‘‘கழக முப்பெரும் விழா’’வின் உணர்ச்சியும் எழுச்சியும் மிக்க வரலாற்றினை விளக்கும் ஒலி, ஒளிக்காட்சி, கருத்தைக் கவரும் வகையில் தயாரிக்கப்பட்டு ஒளிபரப்பப் பட்டது.**



அந்த வீடியோவில் இடம் பெற்ற ‘கழக முப்பெரும் விழா’ பற்றிய தொகுப்பு வருமாறு:-

உலகம் போற்றும் ஒப்பற்ற தலைவராம்... நம் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டில் கொண்டாடப்படும் முப்பெரும் விழா இது!

ஆம் ! திராவிட இயக்க வரலாற்றை நான்காகப் பிரித்தால்...

1917இல் சர்.பிட்டி தியாகராயர், டாக்டர் டி. எம். நாயரால் தென்னிந்திய நல உரிமைச் சங்கமாய் உருவான “நீதிக்கட்சி”

அதற்கு அடுத்து 1925இல் தந்தை பெரியாரால் நிறுவப்பட்ட “சுயமரியாதை இயக்கம்”

1944 இல் நீதிக் கட்சியும் சுயமரியாதை இயக்கமும் சேர்ந்து உருவான “திராவிடர் கழகம்” - அதைத் தொடர்ந்து... 1949 செப்டம்பர் 17 இல் பேரறிஞர் அண்ணாவால், முத்தமிழ் அறிஞர் கலைஞரால் உருவான “திராவிட முன்னேற்றக் கழகம்” தொடங்கப்பெற்ற தினமும், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், பார் போற்றும் பேரறிஞர் அண்ணா பிறந்த தினமும், இணைந்து கொண்டாடப்படும் ஆகச்சிறந்த ஜனநாயக இயக்க வரலாற்றின் மாபெரும் விழாவே “முப்பெரும் விழா” !

அதுமட்டுன்று... கொட்டும் மழையில்... ராபின்சன் பூங்காவில், கொள்கைப் புரட்சியோடு கட்டமைக்கப்பட்ட கழகத்தின் பவள விழாக் கொண்டாட்டம், “முப்பெரும் விழாவின்” மகுடத்தில்... மேலும் ஒரு வைரக்கல்லாய் ஒளிர்கிறது.

பகுத்தறிவுச் சிந்தனையை சமூகத்தில் வித்திட்ட தந்தை பெரியாரின் கடமையை,

சுயமரியாதைப் புரட்சியை அன்னைத் தமிழ் நிலத்தில் விளைவித்த பேரறிஞர் அண்ணாவின் கண்ணியத்தை,

சமத்துவம் சமூக நீதிக் குரலாய் உலகெங்கும் ஓங்கி ஒலித்த அஞ்சுகத்தாயின் புதல்வர் - முத்தமிழ் அறிஞர் கலைஞரின் கட்டுப்பாட்டை,

இவை மூன்றையும் ஒருசேர நின்று கட்டிக்காத்து திராவிட மாடல் தத்துவத்தின் செம்மலாய் விளங்குகின்ற கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை வாழ்த்தி...

இதோ நம் கண் முன்னே...

தமிழினம் போற்றும் சரித்திரத் தலைவர் ...

வான்புகழ் கொண்ட வரலாற்றின் நாயகர்...

ஐந்துமுறை நாடாண்ட அஞ்சுகச் செல்வர்...

“ஐந்தமிழ் அறிஞர் “ அய்யன் கலைஞர் அவர்கள் உரையாற்றுகிறார்.

(இதனைத் தொடர்ந்து - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உரையாற்றுவது போல ‘ஏ.ஐ.’ தொழில் நுட்பத்தில் தயாரிக்கப் பட்ட வீடியோ ஒளிபரப்பாகி, அனைவரையும் பிரமிப்பில் ஆழ்த்தியது.)



திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில் தந்தை பெரியார் அவர்களின் 146வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு அவரது திருவுருவச்சிலைக்கு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி மாலை அணிவித்து, சமூக நீதி நாள் உறுதி மொழி வாசித்தார். உடன் கழக மருத்துவ அணித் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், இரா.ஸ்ரீதரன், எஸ்.பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், ஆராஞ்சி ஆறுமுகம், அ.சிவக்குமார், க.சுப்பிரமணி, அ.ஏழுமலை, காலேஜ் கு.ரவி, அய்யாகண்ணு, நா.பழனி, ப.முருகையன் உட்பட பலர் உள்ளனர்.